**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.56** **நாள்: 27.04.2018**

**போரூர் மின்சார மயான பூமியில் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால், அருகில் உள்ள பிருந்தாவன் நகர் மயான பூமியை பயன்படுத்தி கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, வளசரவாக்கம் மண்டலம், பகுதி–34, வார்டு–151ல் அமைந்துள்ள போரூர் மின்சார மயானபூமியில், எரிமேடை பழுது மற்றும் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இருப்பதால், அதனை சீர்செய்யும் பொருட்டு 28.04.2018 அன்று முதல் 45 நாட்களுக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட உள்ளது.

மேலும், பராமரிப்பு பணி நடைபெறும் நாட்களில் அருகில் உள்ள வார்டு–149, பிருந்தாவன் நகர் மயானபூமியை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**